98—

மீனவர்களுக்கு பயிற்சி வகுப்பு

***34195—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இயற்கைப் பேரிடரிலிருந்து மீனவர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள பயிற்சி வகுப்புகள் நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இயற்கைப் பேரிடரிலிருந்து மீனவர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள பயிற்சி வகுப்புகள் நடத்த அரசு முன்வருமா என்கிற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்வைத்திருக்கிறார்கள். மீனவர்கள் மட்டுமல்ல, பேரிடர் அபாயத்திற்குள்ளாகும் சமூகத்தினர் தங்களுக்குள் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கும், ஆங்காங்கே உள்ள உள்ளாட்சி அமைப்புகளுடன் சேர்ந்து பணியாற்றுவதன்மூலம் பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கு உருவாக்கப்பட்டுள்ள உள்கட்டமைப்புகளை சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்வதற்கும் தயார்படுத்தும் விதமாக சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்மூலம் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தினால் ரூ.15 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும், 2,89,331 நபர்களுக்கு 4,977 பிரிவுகளில் பேரிடர் நோக்கி தயார் நிலையில் இருத்தல், வீதி நாடகங்கள்மூலம் பேரிடர் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், நீச்சல், முதலுதவி, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் போன்ற பலவகையான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

2018 மே 31]

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே, தமிழகத்தில்தான் அதிகமான கடற்கரைப் பகுதிகள் இருக்கின்றன. தமிழகத்தில் 13 கடற்கரை மாவட்டங்கள் உள்ளன. நம்முடைய மாநிலத்திலே பல்வேறு இயற்கைப் பேரிடர் சம்பவங்களை நாம் கடந்து வந்திருக்கிறோம். 2004–ல் சுனாமியைக் கடந்து வந்திருக்கிறோம். வர்தா புயல், ஒகி புயல் போன்றவற்றைக் கடந்து வந்திருக்கிறோம். நம்முடைய மக்கள் பல்வேறு வகைகளில் தங்களுடைய உயிரையும், உடைமைகளையும் இழந்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் பயிற்சிகள் கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். நான் இல்லை என்று சொல்லவில்லை. 15 கோடி ரூபாய் அளவிற்குமேல் ஆண்டொன்றுக்கு நிதி ஒதுக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்.*

இயற்கைப் பேரிடர்கள் பல்வேறு பகுதிகளில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும்போதும், வர்தா புயல், ஒகி புயல் போன்ற புயல்கள் வருகின்றபோதும், பேரிடர்கள் திடீரென்று ஏற்படும்போது நம்முடைய மக்கள் எல்லோரும் பெரும் பொருட்சேதங்களையும், உயிர்ச் சேதங்களையும் சந்தித்திருக்கிறார்கள். பேரிடர்களை திறம்படச் சமாளிக்கவோ, பேரிடர்களை எதிர்கொள்ள தயார் நிலையில் இருக்கவோ, பேரிடர்களால் ஏற்படும் பாதிப்புகளைக் கட்டுப்படுத்தவோ, பேரிடர் ஏற்படப் போவதை முன்னேரே கண்டறியும் வசதியோ, கடலோரத்தில் ஏற்படும் பேரிடர்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான வரைவுத் திட்டமோ போன்ற எதுவும் ஆக்கப்பூர்வமான அளவில் ஏற்படுத்தப்படாத நிலையில் நாம் இருக்கிறோம் என்பதை நான் பதிவு செய்கிறேன்.

சென்னையில் உள்ள Madras Research Centre of Central Marine Fisheries Research Institute *கடலோரத்தில் ஏற்படும் பேரிடர்களை எதிர்கொள்வது பற்றிய ஆய்வுகள் போன்றவற்றை அது கையாள்கிறது. மிகவும் நவீனமயமான முறையில் கடலோரப் பகுதியில் மீனவர்கள் பேரிடர்களை எதிர்கொள்வதற்காக* Safety for Fishermen: The way forward *எனும் சிறப்புப் பயிற்சி கையேட்டினை ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் மேலாண்மை ஸ்தாபனம்,* Food and Agriculture Organisation of the United Nations *வடிவமைத்துள்ளது. இத்தகைய நவீன முறையிலான சர்வதேச தரம் வாய்ந்த பேரிடர் மேலாண்மை பயிற்சிகளை மீனவர்களுக்கு வழங்கி, உயிர் சேதம் மற்றும் பொருட்சேதங்களைக் குறைத்திடவும், தவிர்த்திடவும்*

ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வாறு நவீன முறையில் ஏற்பாடுகளைச் செய்து நம்மை பாதுகாத்துக்கொள்வதற்குரிய ஏற்பாடுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்காலத்திலாவது செய்து தர முயற்சிப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். பொதுவாகவே புவியியல் அமைப்பானது, புயல், வெள்ளம், சுனாமி, மின்னல், வறட்சி போன்ற இயற்கைப் பேரிடர்கள் தமிழகத்தில் ஏற்படுவதற்கு இயல்பாகவே வழிவகுக்கிறது. பேரிடர் மேலாண்மை என்பது தணித்தல், ஆயத்த நிலை, மீட்பு மற்றும் மறு கட்டமைப்பு போன்ற அனைத்து நிலைகளிலும் பல்வேறு இடர்களை எதிர்கொள்ளும் சிக்கலான, சவாலான ஒரு செயலாகும். அதனால்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மீனவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். நியாயமான கோரிக்கைதான்.

முற்பகல் 10—55

இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்வதற்கான திறன்களை மேம்படுத்துதல், மீட்பு மற்றும் பாதுகாப்பான இடங்களுக்கு மக்களை அழைத்துச் செல்வதற்கு, அரசு எப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்பதற்கு Systematic and Scientific approach உருவாக்கப்பட்டுள்ளது. மீட்புப் படைகள் வருவதற்கு முன்பாகவே, பாதிக்கப்பட்ட பகுதிகளில் சமுதாய பங்களிப்பு இருக்க வேண்டுமென்பதற்காக இந்தியாவிற்கே முன்மாதிரியாக விளங்கும் தமிழக அரசு, முதன்முதலாக First Respondent என்று சொல்லக்கூடிய முதல் நிலை மீட்பர்களான அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மீனவர்கள், நீச்சல் தெரிந்தவர்கள், அந்தப் பகுதிகளுக்கு நன்கு அறிமுகமானவர்கள், அந்தப் பகுதிகளை நன்கு அறிந்தவர்கள் ஆகியோர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு பயிற்சி அளிக்க முடிவெடுத்துள்ளது. மீட்புப் படை வருவதற்கு முன்பாகவே அந்தச் சமுதாய பங்களிப்பினுடைய முக்கியத்துவத்தை அறிந்த, உணர்ந்த அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்ற காரணத்தினால், இந்தியாவில்

2018 மே 31]

இருக்கக்கூடிய 29 மாநிலங்களிலே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் சமுதாய பங்களிப்பை ஊக்குவிக்க வேண்டுமென்ற வகையில் First Respondent *என்ற ஓர் அமைப்பை ஊக்குவித்த ஒரே அரசு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு.* (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இயற்கைப் பேரிடர் என்பது தவிர்க்க முடியாத ஒன்று என்பதை இங்கே சுட்டிக்காட்டியுள்ளார். இயற்கைப் பேரிடர்களை மீனவர்கள் எதிர்கொள்வதற்கு அவர்களைத் தயார்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் இங்கே சுட்டிக்காட்டியுள்ளார். பிற மாநிலங்களுக்கு வழிகாட்டுகின்ற வகையில் Systematic and Scientific approach *என்ற முறையில் இயற்கைப் பேரிடர்களை அணுகுகிற அரசாக நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு வழிநடத்தி வருகிறார்கள். வர்தா புயல் பற்றிகூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஓகி புயல் ஏற்பட்ட காலங்களில் மிக மிக நேர்த்தியாக தொடர்ந்து 24 மணி நேரமும் கண்காணித்து, தேவையான அறிவுரைகளை வழங்கிய முதலமைச்சராக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்பட்டார்கள். கடந்த காலங்களில் இரப்பருக்கு நிவாரணம் வழங்குவது என்பது ஓர் அரிய செயலாக இருந்தது. ஆனால் அதையெல்லாம் மாற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரப்பருக்கு நிவாரணம் வழங்கினார்கள். இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், இயற்கைப் பேரிடர் என்பது தவிர்க்க முடியாதது. எதிர்காலத்தில் அதை எதிர்கொள்வதற்கான சிறந்த வழிமுறைகளையும், வழிகாட்டு முறைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வைத்திருக்கிற காரணத்தால்தான் வெள்ளம், சுனாமி போன்ற எந்தப் பேரிடராக இருந்தாலும் சரி, அதை எதிர்கொள்வதற்குத் தயாராக இருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடலோர பேரிடர் மீட்புக் குழு என்பதை பல்வேறு நிலைகளிலே அமைத்திருக்கிறார்கள். கடலோர மாவட்டங்களான 13 மாவட்டங்களிலும் தொடர் நிகழ்ச்சியாக நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள் பற்றி ஏற்கெனவே நான் இந்த சபையில் பதிவு செய்திருக்கிறேன். அதற்கு தகுந்த முறையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற விஷயங்களை நிச்சயமாக*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்வதற்கும், தணிப்பதற்கும், பாதுகாப்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அரசு ஆய்வு செய்து, தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில தகவல்களையும், சில கருத்துகளையும் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அதை இல்லை என்று நான் மறுக்கவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயல் ஏற்பட்டபோது தக்கநேரத்தில் நடவடிக்கைகளை எடுக்காததால் 174 பேருக்கும் அதிகமான மக்கள் இறந்துவிட்டார்கள். விவசாயிகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். மேலும், மீனவர்களுடைய படகுகள் மற்றும் மீன் பிடிக்கும் தளவாடங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டன. ஆனால், அதற்கு உரிய நிவாரணம் சரியாக வழங்கப்படவில்லை. எதிர்காலத்தில் அதற்கு உரிய நிவாரணத்தை இந்த அரசு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசை நான் வேண்டிக் கேட்டுக்கொள்வது என்னவென்றால்* calamity –*அதாவது இப்படியான சம்பவங்கள் அல்லது இயற்கைப் பேரிடர்கள் நிகழும்போது* Coast Guard *உடனடியாக* rescue operation–*க்குச் செல்ல வேண்டும். இது* practical *ஆக நடக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.* They have to obtain permission from the District Collector. *மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கே இருக்க வேண்டும். அவர் அதற்கு உரிய* permission–*ஐ வழங்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உறுப்பினர் திரு. பிரின்ஸ், கேள்வியை சீக்கிரம் முடியுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *இயற்கைப் பேரிடர் காலங்களில் உடனடியாக* rescue operation *செய்திருந்தால் இவ்வளவு உயிர் சேதங்கள் ஏற்பட்டிருக்காது. பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றுவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுப்பதற்குரிய வாய்ப்புகளும் இருந்திருக்கும். அதற்குரிய கட்டுப்பாட்டு அறைகளை*

2018 மே 31]

ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு மீனவக் கிராமத்திலும் ஏற்படுத்தியிருந்தால், உடனடியாக அவர்கள் விரைந்து சென்று பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றுவதற்கு ஏதுவாக இருந்திருக்கும். அதிநவீன கப்பல்கள், படகுகள், ஹெலிகாப்டர் தளம் போன்ற ஏற்பாடுகளைச் செய்வோம் என்றால் பெரிய நஷ்டங்களை, கஷ்டங்களை உடனடியாகத் தவிர்க்க முடியும். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், நீண்ட கால கோரிக்கையான ஒரு ஹெலிகாப்டர் தளத்தினை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Coast Guard *பாதுகாப்பை எல்லா மீன்பிடிப் பகுதிகளுக்கும் கொடுக்க வேண்டும். எதிர்காலத்தில் நவீன ரக கப்பல் கொடுக்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட வசதிகள் செய்து கொடுக்கும்போது நிச்சயமாக மக்கள் பயன்பெறுவார்கள். அதற்குரிய ஏற்பாடுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு முக்கியமான கேள்விகளை இங்கே கேட்டிருக்கிறார்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *கடலோர பேரிடர் அபாய குறைப்புத் திட்டத்திலே உலக வங்கி நிதி உதவியுடன் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1,481 கோடி ரூபாய்க்கு ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தி அதில் விரிவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. ஒகி புயல் ஏற்பட்டதனால் சேதமடைந்தவற்றை நிரந்தரமாகச் சீரமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் மூத்த அமைச்சர்களோடு சேர்ந்து சென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு இதுசம்பந்தமாக கோரிக்கை வைத்தார்கள். உடனடி தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளுக்காக நிரந்தரமாக கப்பல் படைத்தளம் ஒன்று,*

இந்திய கப்பல் படை மற்றும் கடலோரக் காவல் படைமூலம் அமைத்தல், செயற்கைக்கோள், வானொலி மற்றும் transformers வழங்குதல், ஆழ்கடல் மீனவர்களுக்கு பேரிடர் குறித்த தகவல்கள் தெரிவிக்கும்பொருட்டு உயர் அதிர்வு தொடர்பு சாதனங்களை உருவாக்கிட 180 கோடி ரூபாய் வழங்குதல், ஆழ்கடல் மீன்பிடி கலன்களுக்கு ரூபாய் 36 கோடி மதிப்பில் அவசர நிலையினைத் தெரிவிக்கும் transmitters வழங்குதல், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.4,025 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த மீன்பிடி கட்டமைப்புகளை உருவாக்குதல், பாதிக்கப்பட்ட மீன்பிடி கட்டுமானங்களை சரிசெய்ய ரூ.48 கோடி தமிழ்நாட்டிற்கு உடனடியாக ஒதுக்கீடு செய்தல் போன்ற கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பாக, கன்னியாகுமரியைச் சேர்ந்த உறுப்பினர்கள், தென் தமிழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், கடலோர மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், என்ன உணர்வில் இருக்கிறீர்களோ அந்த உணர்வை பிரதிபலிக்கிற அரசாக (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இருக்கிறது. இதையெல்லாம் உங்களுடைய சார்பாக, தமிழக அரசின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் கோரிக்கையாக வைத்திருக்கிறார்கள். வருகிற காலங்களிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மத்திய அரசினுடைய ஒத்துழைப்பையும், அனுமதியையும், நிதியையும் பெற்று முன்னுரிமை அடிப்படையிலே இதையெல்லாம் செயல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

99—

பேருந்து வசதி

***10614—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—